# Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Deposition of witness for | : |
| Name | :Panneerselvam |
| Father's Name | :Chinnapaiyan |
| Village | :Janathapuram |
| Taluk | :Vaniyambadi |
| Caste | :BC |
| Calling | :Kooli |
| Religion | :Hindu |
| Age | :54 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.08.2025

MCOP.107/2020 PW1 Name:பன்னீர்செல்வம்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கபட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் பெயர் தெரியாது. பதிவு எண் 0168 ஆகும். அந்த வாகனத்தின் உரிமையாளரை வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகன உரிமையாளர் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரர் பெயர் மற்றும் அவருடைய வாகன எண் எதுவும் குறிப்பிடபடவில்லை. வாகனத்தை ஓட்டிய நபர் யார் என்று முதல் தகவல் அறிக்கையில் கூறபட்டுள்ளது. அவர்மீது வழக்கு போடவில்லை. பஜாஜ் ஆட்டோ வாகனம் விபத்து ஏற்படுத்தியதாக முதல் தகவல் அறிக்கையில் கூறபட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரின் பதில் பற்றி தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் எந்த விபத்தையும் ஏற்படுத்தவில்லை.

அவருக்கு அடிப்பட்டு அவருடைய வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு எடுத்து செல்லபட்டது என பதிலில் கூறியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிஎன்23எடபிள்யு 4843என்ற வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு சென்றது எனக்கு தெரியாது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் எனக்கு விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் சரியாக குறிப்பிட்டு உரிமையாளர் பெயர் 1ம் எதிர்மனுதாரர் என தவறாக கூறுபட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யபட்டது. எனக்கு ஏற்பட்ட விபத்திற்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடியாவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆட்டோவின் பதிவு எண். 1068 ஆகும். அந்த ஆவணத்தின் உரிமையாளரை மனுவில் கட்சி சேர்க்காததால் மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய தொழில் வருமானத்தை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மனுவிலும் முதல் விசாணையில் கூறியுள்ள வாகனம் என்மீது மோதி விபத்து ஏற்படுத்திய காரணத்தால் நான் எந்த இழப்பீடு கேட்கமுடியாது என்றால் சரியல்ல. மசாஆ4 ஆவணத்திற்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதில் குறிப்பிட்டுள்ள நபரை கட்சி சேர்க்ககாத காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்கவேண்டியது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. மசாஆ 5 ஆவணத்தில் வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என குறிப்பிடபட்டுள்ளது. அதில் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு பாலிசி எண் காட்டபடவில்லை.

மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 06/08/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.08.06 14:29:18 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.